முருகப்பெருமான் துணை

**மகான் சங்கிலிச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.11.2022, சனிக்கிழமை

1. கருணையோடு காத்தருள வந்த
கந்தனே ஆறுமுக அரங்கனே
பெருமைபாடி அனுகூல ஆசி
புகலுவேன் சுபகிருது துலை திங்கள்
2. திங்களிலே மூவாறோர் திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 19 ம் நாள் 05.11.2022, சனிக்கிழமை)
தேசிகனுக்கு சங்கிலிச்சித்தர் யானும்
ஓங்கார பலம்பெருக உரைப்பேன்
ஓங்கார குடில் படைத்து அருளும்
3. அருளும் அரங்கன் ஞான வழி
ஆறுமுகன் தானும் தரும் வழி
வரமென முன்மொழிந்து நன்கு
வணங்கித் தொடர்ந்து வர
4. வருகவே உலகம் எங்கிலும்
வல்லமையான ஞானம் பெருகி
தரும சிந்தை பலமும் கூடி
தான் என்ற சுயநல நிலை விலகி
5. விலகி தன்னார்வத் தொண்டாக
வினை போக்கும் வழிகள் கூடி
கலகம் பேதம் சாதி மதவழி
கட்டுண்டு சிறுமை கண்டிடா வண்ணம்
6. வண்ணமுடன் சமூக பாதுகாப்பாய்
வையகம் அரங்கன் வழிகாட்டலில்
எண்ணமெல்லாம் திடம் ஆக்கி
இயம்பிடுவேன் நன்மை அடைவர்
7. அடையவே அரங்கன் அவதார
ஆற்றலாக நோக்கமாக இனி
தடையின்றி உலகமாற்றமதும்
தக்க சேவை வழி நிகழ இருக்க
8. இருக்கவே கலியுக மக்களே
ஏன் இன்னும் அலட்சியம்
கருத்தாக அரங்கனை நாடி
கலியிடரை வெல்ல அருள்வாய் என
9. அருள்வாயென தீட்சை அடைந்து
அன்னதான சேவை ஏற்று
பொருளை தானமாக வழங்கி
புண்ணியபலமதை பெருக்கிட

10. பெருக்கிட அவரவர் வினைவிலகி
பிரணவ சித்திமிகு ஞானம்
முருகப் பெருமான் தயவாக
முழுமையான ஆசி அருளாக

11. ஆகவே அனுகூலம் அடைந்து
அகிலத்தார் ஞானிகள் ஆகி
யுகத்தில் ஞான ஆட்சி தருவர்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

—சுபம்—